விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்

அழகிய ஆரம்பம்

2025 September 1-15

இனி

ஈ இதழ்



கனவுக்கும்
நினைவுக்கும்
இடையே
விளையாடுகிறது.
வாழ்க்கை

பரிசு ரூ.100

இருளை உண்டு
செரித்துக் கொண்டே
ஒய்யாரமாக
உதிக்கிறது சூரியன்.

புல்லரம்பாக்கம் ஏ. மூர்த்தி

7094053241 indhrumail@gmail.com

அனைவருக்கும் வணக்கம்.

சென்ற இதழ் 20 பக்கங்கள் பதிவானதை பலரும் பாராட்டினார்கள்.

இந்த இதழிலிருந்து இன்று வெப் சைட்டிலும் கால் பதிக்கிறது. வெப் சைட் தற்போது தான் உருவாகி வருகிறது. பல விசயங்களை பதிவேற்றம் செய்து வருகிறோம். இன்னும் கூடுதல் விபரங்கள் www..indhru.in என்ற வெப் முகவரியில் உள்ளது. எழுத்தாளர்கள், வாசகர்கள் பயன்படுத்திக்கொள்ளவும். அதில் உங்கள் கருத்துக்களை பதிவேற்றம் செய்ய முடியும். உங்களுக்கு தோன்றும் கருத்துக்களை எங்களுக்கு அனுப்பிவையுங்கள்.

இனி அட்டையில் இடம்பெறும் படைப்புக்கு ரூ.100 பரிசு அளிக்கப்படும்.. வாசகர் கடிதம் பகுதிக்கு பரிசு ரூ.50. மேலும் பல பரிசுகள் தர முயற்சி செய்கிறோம்.

இன்று ஈ இதழின் வாட்சப் சேனலை அவ்வப்போது பார்க்கவும். அதிலும் படைப்புகள் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

வித்தியாசமான படைப்புகளை உருவாக்குங்கள். எழுத்து உலகில் உங்களுக்கான இடத்தை பிடியுங்கள். அடுத்த இதழிலிருந்து உங்கள் கையெழுத்திலேயே படைப்புகளை பிரசுரம் செய்யலாம். ஒரு வெள்ளைத்தாளில் எழுதி வாட்சப்பில் மட்டும் போட்டோ எடுத்து அனுப்பி வைக்கவும். வாழ்த்துக்கள்.

வெ.கோபிநாத், ஆசிரியர்.


September 2025


Mo	Tue	We	Thu	Fri	Sat	Sun
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

இணையவழி மோசடிக்கு பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

தமிழில் ஆரம்பம்...
இன்று ஒ இதழ்
3
www.indhru.in
7094053241
indhrumail@gmail.com







-லி.நௌஷாத் கான்-
கவிதைகள்





காதல் தூவானத்தின்
பிரதி தான.
தோற்றதை
ஏற்ற நினைத்தாலும் பாவம்.
விட்டாலும் விடாமல்
உனக்குள் சொட்டு,சொட்டாய்
கண்ணீர் மழையை
பெய்ய விட்டுக் கொண்டே இருக்கும்!

இப்பிரபஞ்சத்தில் பிறந்த
ஒவ்வொருவருக்கும்
ஏதோ ஒரு தேடல
இருந்து கொண்டே இருக்கும்.
என் இதயத்தின் தேடலாக
நீயே இருந்து விட்டுப் போ!

-ஆயுள் முழுதும்
அணைத்து கொண்டே
அணைந்து போக வேண்டுமடி!

உன் காதலை
தொலைத்து விட்டு
எந்த குற்றயுணர்ச்சியும் இல்லாமல்
இன்னும்
இந்த மண்ணில்
ஏன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.
கேள்விக்குறியான
வாழ்க்கையை போல்
கேள்வியே என்னிடம்
பதிலாக உள்ளது!


இ இன்று
ஈ இதழ் இலவசமாக
படிக்க வேண்டுமா?
7094053241

மினி கதை


வெட்டு
மரத்தை வெட்டி விற்ற
பணத்தில் துணி வாங்கி
தைக்கக் கொடுத்தார்
மணவாளன்.
அளவு எடுத்த டைலர்
சின்னசாமியும் துணியை
'வெட்ட' ஆரம்பித்தார்!
மலர் மதி
வேலூர்


வீட்டில் வீண் செய்த
நேரத்தை, ரோட்டில்
சரிசெய்ய
நினைக்காதீர். சாலை
விபத்துகளை
தவிர்ப்போம்.

செம்மீனே... செம்மீனே...

மேகக் கருக்கலில்-
பௌர்ணமி நிலவாய் ஜொலிக்கும்
அழகிய செம்மீனே...
வலை வீசவுமில்லை, தூண்டிலிடவுமில்லை
என்னிடம் சிக்கியது எப்படி?
உன்னை மழைத் தூறலோடு
பார்க்கும் பொழுது
இசைச்சாரல் வீசுகிறது
எனக்குள் இளமானே...
மழை நின்ற பிறகும்
தூறல் நிற்காத
உன் மேனியை
பார்க்கும் பொழுது
நீருக்குள் நழுவிச் செல்லும் மீனைப் போல
உன்னை தழுவி செல்கிறது
என் மனசு.
செண்டாக மலர்ந்திருக்கும் மலரே...
வண்டாக உன்னைச் சுற்றி
வலம் வருகிறேன்.
உன் இதழில்
புன்னகை பூக்கள் எங்கே?
ஓ... வேடனிடம்
மாட்டிக்கொண்டோம் என்ற பயமா?
கவலைப்படாதே கிளியே
உன்னை வேட்டையாட வந்தவன் இல்லை,
வேடிக்கை மட்டுமே பார்ப்பவன்.
வழி தவறி வந்த உன்னை
கை தவறிக் கூட தொட மாட்டேன்
உன் அனுமதி இல்லாமல்.



பாரதி முத்து
வேலூர்

Emergency Helpline No.

100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
108	Medical Helpline
131	Indian Railway Enquiry
139	Railway Enquiry
1031	Anti Corruption Helpline
1072	Train Accident
1090	Anti Terror Helpline
1910	Blood Bank Information
1947	Aadhar card-UIDAI
1071	Air Accident
1906	LPG Emergency Helpline
1919	Eye Donation Bank
1551	Kisan Call Center
1096	Natural Disaster Control
1098	Child Abuse Hotline

சிரிப்பு

ஒருவர் : தலைவரே,
உங்க அரசியல் வாழ்க்கையை
எப்போது ஆரம்பித்தீர்கள்?

தலைவர் : ஸ்கூல் மார்க்
ரேங் கார்டில் எனது
அப்பாவின் கையெழுத்தை
நான் போட்டநாளில்.

ஒருவர் : உங்க பைனான்ஸ்
கம்பெனியில் மரைன்
இன்ஜினியரிங் படித்தவர்களை
மட்டுமே வேலைக்கு
சேர்க்கிறீர்களே! ஏன் ?

அடுத்தவர்: அவங்க கம்பெனி
முழுகாமல் பார்த்துக்
கொள்வார்களாம் ....

நாஞ்சில் சு. நாகராஜன்
பறக்கை, கன்னியாகுமரி.
செல். 9486387026

போர் வேண்டாம்



அன்பு சூழ் உலகம் வேண்டும்.
கார் மேகம் சூழ வேண்டும்.
போர் மேகம் வேண்டாம்.
மழை பொழிய வேண்டும்.
குண்டு மழை வேண்டாம்.
விவசாயம் செழிக்க வேண்டும்.
ஆயுத வியாபாரம் வேண்டாம்.
பூமி தாய் குளிர வேண்டும்.
பூமி தாய்க்கு
அக்னியால் சூடு
வைக்க வேண்டாம்.

- கயத்தை சத்யா,
கும்பகோணம்

இனிதே ஆரம்பம்...
இன்று ஒ இதழ்
8
www.indhru.in
7094053241 indhrumail@gmail.com

Free Advertisement


















ஆரம்பம்...
இன்று ஓ இதழ்
www.indhru.in
7094053241 indhrumail@gmail.com

சித்திரம்

அரூபமாய்
நீ வானில்
அழியாத கோலமாய்
என் மனதில்
உன் புகைப்படம்
சித்திரமாய் சுவரில்
அலங்கரிப்பு
உன் வாசம்
நாசித் துவாரம் வழியே
உடல் முழுதும் பரவ
பரவச நிலையில்
பட்டாம்பூச்சியாய்
நான் வானில்
சிறகடித்துப் பறக்க
என் புகைப்படத்தை
சித்திரம் தீட்ட எவருமில்லை
இப்புவியில் !



பி.ஆர்.கிரிஜா
சென்னை



www.indhru.in

எங்கடி..உங்க வீட்டுக்காரர்?.

கூலி...வேலைக்கு
போயிட்டு.அப்படியே...
கூலி திரைப்படத்துக்கு
சென்று வருகிறேன் என்று
கூறிவிட்டு சென்றார்.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்

வாசகர் வாய்ஸ்

அருண் பிரகாஷ்-
அவர்களின்
"வேண்டுதல்" கவிதை
வித்தியாசமான கருவாக
காணப்பட்டது

ரூ.
50
பரிசு

.புதிய பகுதியாக
மலர்ந்திட போகும்
"இலவசவிளம்பரம்"
சிறப்பாக
அமைந்திட வாழ்த்துக்கள்
.கவிஞர்
முத்து ஆனந்த் அவர்களின்
படைப்புகள் சிறப்பாக
காணப்படுகிறது.




நான் பரிசு பெற்ற
தருணத்தை சிறப்பாக
வெளியிட்டு என்னை
ஊக்கப்படுத்திய
இன்று..ஈ இதழ்க்கு
மிக்க நன்றி.

திருச்சிற்றம்பலம்
சுரேஷ்



7094053241 indhrumail@gmail.com



1. எங்க ஆபீச சாகற வரைக்கும் நான் மறக்க மாட்டேன்டா...

ஏன்டா?

தூங்கவும் விட்டு சம்பளமும் குடுக்கறாங்களேடா....

2. எம் பொண்டாட்டிக்கும் அம்மாவுக்கும் சண்டை வந்தா முதல்ல என்ன பன்னுவேன்னு தெரியுமாடா?

என்னடா செய்வ?

மண்டை உடையாம இருக்க ஹெல்மெட் போட்டுக்குவேன்.

ஏ. மூர்த்தி
திருவள்ளூர் மாவட்டம்
கைப்பேசி -9600886441.

நிழல்கள்...



சசிகலா திருமால்
கீழப்பழுவூர்

எனதாயினும் நானறியாது
வெளிச்சத்தோடு உறவாடி மகிழ்கிறதென்
நிழல்...


கேட்பார் யாருமற்ற அடர் இருளில்
அலறிடும் ஆந்தை போலவே
இதோ... சொற்களின்
கழுத்தினை நெறுக்கிப்பிடித்து
திணித்துக் கொண்டிருக்கிறேன்
கவிதைக்குள்...


யாருமற்ற அனாதை வெளியில்
காற்றின் பெரும் ஓசையினை
கிழித்துச் செல்லும்
உணர்வின் ஓலமொன்று
உயிரை உலுக்கிச் செல்கிறது...

கவலைகளால் கண்களை
கண்ணீர் நிறைக்கையில் எல்லாம்
யாருமறியாதொரு நிழல்
தழுவிக் கொள்கிறதெனை
ஆறுதலாய்..


கல்லறைக்குள்ளும்
என்னோடு பதுங்கிட முற்படும்
நிழல்களுக்கு தீயிட முற்படுகிறேன்...
காற்றின் விரல்களோ
கவிதையை வெறுக்க
வெற்றிடம் நிரப்பிட முற்படும் மனமோ
வெறுப்பை விதைக்கிறது...

இதோ....
நான் விரும்பும்
வண்ணங்களை ஏற்க மறுத்து
நிஜங்களை சுமந்து
நிறமற்ற நிழல்களாய்
நிறைகிறது மனதில்


தடம்
நீ
என்னவோ
வெகு சாதாரணமாகத்தான்
என்னைக்
கடந்து செல்கிறாய்!
நானல்லவா
தடம் புரண்டு போகிறேன்!
முத்து ஆனந்த்
வேலூர்


விடை
அணைத்து
விடை பெற்று
விலகுகிறாய்!
இமைக்க
மறக்கத் தொடங்குகிறது
என்
விழிகள்!
முத்து ஆனந்த்
வேலூர்


பறவை
நீ
வரும்போதெல்லாம்
சிறகுகளை
விரித்துக் கொள்கிறது
என்
காதல்!
முத்து ஆனந்த்
வேலூர்


உயிர்
நீ
ஏமாற்றி விட்டுப்
போனால் என்ன?!
இனமும்
வாழ்ந்து
கொண்டுதானிருக்கிறது
என் மீதிருக்கும்
என் காதல்!
முத்து ஆனந்த்
வேலூர்


தொட்டால் தொடரும்
நான்
உன்னை வருட...
நீ
என்னைத் திருட....
பார்வைகள்
படர...
தேவைகள்
தொடர...!
விடுமுறை
இன்றே
வந்து விடு!
இப்பொழுதே
தந்து விடு!
வார்த்தைகளுக்கு
விடுமுறை விடு!
கோவைக்கவி
புவனா



டிப்ஸ்

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135

1. சப்போட்டாவை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கண் பார்வை தெளிவாகும். மலச்சிக்கல் தீரும்.

2. சௌசௌ காயை உணவில் சேர்த்துக் கொண்டால் சிறுநீரகத்தில் கற்களை சேராமல் தடுக்கும் சர்க்கரை அளவை குறைக்கும். இதயத்திற்கு பாதுகாப்பை அளிக்கும்.

3. கோதுமை மாவில் சிறிது அளவு கல் உப்பை ஒரு துணியில் கட்டி, அந்த மாவில் போட்டு வைத்தால் கோதுமை மாவு கெட்டுப் போகாமல் நீண்ட நாட்களுக்கு நன்றாக இருக்கும்.

4. தினசரி செவ்வாழை சாப்பிட்டு வந்தால் கண் பார்வை தெளிவாகும். சிறுநீரக கற்களை சேராமல் தடுக்கும். சொறி சிரங்கு நீங்கும்

5. காளான் சாப்பிட்டு வந்தால் காது நன்றாக கேட்கும். மார்பகப் புற்றுநோய் தடுக்கும்.

==========

பாவூர் சத்திரம் மெயின் ரோட்டில் உள்ள ஒரு டீ கடையில் கண்டது...







"அந்த ஜோதிடர் போலி-ன்னு எப்படி சொல்றீங்க ?"

"என் ஜாதகத்தைப் பார்த்துட்டு, 'நீங்க மீனம் ராசி, இப்போ மீனத்துக்கு நேரம் சரியில்லே, வீட்டை மடிப்பாக்கத்திலிருந்து 'மீனம்'பாக்கத்துக்கு மாத்திட்டா சரியாயிடும்' னு சொல்றாரே...

டீ. என். பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம் கைபேசி: 9884808965

உங்கள்
படைப்புகளை
முன்னரே பார்க்க
இன்று இ இதழின்
சேனலில்
இணையுங்கள்...

மற்றும்
பொழுதுபோக்கு
செய்திகளையும்
தினமும்
கண்டு
மகிழுங்கள்...

அருகில் உள்ள
QR கோடை
ஸ்கேன் செய்து
இணையுங்கள்...

இன்று / ஈ இதழ்
WhatsApp channel

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே...
யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர் ஆசிரியர்
திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் - 29 சக்தி நகர்,
ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241

இன்று இதனை படித்ததற்கு நன்றி